# லெய்டன் செப்பேடுகள்: சோழப்பேரசுக்கும் ஸ்ரீவிஜயப்பேரசுக்குமான தொடர்புகள் மற்றும் நாகப்பட்டின பௌத்த விகாரை

# Leiden Copper Plates: Chola-Srivijaya Links and the Nagapattinam Buddhist Vihara

முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini[1]

**Abstract**

The University of Leiden in Netherlands, which was founded in the year 1575, has the honour of preserving the *Anaimangalam* Copper Plates at its special collections section. These copper plates, which are referred to as 'Large Leiden Plates' and 'Small Leiden Plates', list the ancestry and genealogy of *Chola* kings as well as their exceptional qualities, conquests, and achievements. This article attempts to explains how these copper plates were brought to be a part of the library collection. The inscriptions found on the copper plates contain the historical information of a royal charter issued by the great *Raja Raja Chola*, which is indicative of the links between the *Chola* and *Srivijaya* empires in the 11th Century A.D. The empire of *Srivijaya* was a Malay Buddhist empire that had its base in the Indonesian islands of Sumatra and Java and stretched to the north covering Peninsular Malaysia up to south Thailand. Srivijaya empire was flourishing between the 7th and 11th century A.D. as a powerful trade centre in the region until the military expeditions of the *Chola* rulers in the early 12th century A.D. hampered its progress. The Leiden copper plates, which were released on the 21st year of *Rajaraja's* reign, describe the details about the revenues granted by the emperor to the *Anaimangalam* village and a few smaller villages for the maintenance of the Buddhist monastery named *Chudamani Vihara* in *Nagapattinam.*

Date of submission: 2021-09-21
Date of acceptance: 2021-10-10
Date of Publication: 2021-12-25
Corresponding author's Name: Dr.K.Subashini
Email: ksubashini@gmail.com

**Key Words:** Anaimangalam Copper Plates, Leiden Copper Plates, Rajarajan, Rajendran, Kulothungan, Srivijaya, ChudamaniVihara, Kadaram,

**குறிப்பு:** பொ.ஆ.மு என்பது 'பொது ஆண்டுக்கு முன்' அதாவது கி.மு என்றும் பொ.ஆ என்பது 'பொது ஆண்டு' அதாவது கி.பி என்றும் இக்கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.

### முன்னுரை

மேற்கு ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான நெதர்லாந்தின் லெய்டன் நகரில் அமைந்திருக்கும் லெய்டன் பல்கலைக்கழகம் 1575ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனைமங்கலம் செப்பேடுகள், அல்லது பெரிய லெய்டன் சிறிய லெய்டன் செப்பேடுகள் என அழைக்கப்படும் சோழர்காலச் செப்பேடுகள் சோழமன்னர்களின் பரம்பரை, சோழ மன்னர்களின் பெயர்கள் மற்றும்

[1] The author is a Lead IT Architect, Hewlett-packard Germany & President of Tamil Heritage Foundation (International Organization for Preserving Tamil Heritage). ksubashini@gmail.com

அவர்கள் ஆட்சிக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஆகியவற்றைக் கூறும் முக்கிய வரலாற்று ஆவணங்களாகத் திகழ்பவை. நெதர்லாந்து லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் அரிய ஆவணங்கள் பகுதியில் இவை பாதுகாக்கப்படுகின்றன. இந்தச் செப்பேடுகள் எவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து நெதர்லாந்திற்கு வந்தடைந்தன என்பது பற்றிய செய்திகளைப் பதிவாக்குகின்றது இக்கட்டுரை. இச்செப்பேடுகள் கூறும் வரலாற்றுச் செய்திகள் பொ.ஆ 11ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்கும் இடையேயான உறவை விளக்கும் ஆவணங்களாகும்.

ஸ்ரீவிஜயப்பேரரசு பொ.ஆ 7ம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஆ 13 வரை இன்றைய தென்கிழக்காசியாவில் இந்தோனேசியாவின் சுமத்ராவிலிருந்து, மலேசிய தீபகற்பத்தையும் உள்ளடக்கிய தெற்கு தாய்லாந்து வரை பரந்து விரிந்த நிலப்பரப்பை ஆட்சி செய்த ஒரு பேரரசு (Munoz, 2006, p.117). இதன் எழுச்சிக்காலம் என்பது பொ.ஆ 7ம் நூற்றாண்டிலிருந்து 11ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை, அதாவது ராஜேந்திர சோழனின் கடற்படைகள் பலேம்பாங் நகரை முற்றுகையிட்டு, கைப்பற்றி, அதே வேளை மலாயா தீபகற்பத்திலும் கடாரத்தைத் தாக்கிக் கைப்பற்றிய காலகட்டம் வரை எனலாம்.

தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரையோர நகரங்களில் ஒன்று நாகப்பட்டினம். ஸ்ரீவிஜயப்பேரரசுடன் இருந்த நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்ட செய்திகளை லெய்டன் செப்பேடுகள் மிக விரிவாக விவரிக்கின்றன. அந்தப் பௌத்த விகாரையைப் பாதுகாக்கவும் அதனைப் பராமரிக்கத் தேவையான அடிப்படை பொருளாதாரச் செலவுகளை ஈடுகட்டவும் சோழப் பேரரசு வழங்கிய சலுகைகளையும் இச்செப்பேடுகள் துல்லியமாகப் பதிந்துள்ளன.

## ஆய்வுப் பின்புலம்

தமிழ்நாட்டின் வரலாற்றுச் சான்றுகள் தமிழகம் மட்டுமன்றி உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் கொண்டு செல்லப்பட்டு தமிழகத்திற்கு வெளியே அவை பாதுகாக்கப்படுகின்றன. பெரும்பாலான இவ்வகை செம்பு, வெள்ளி, கல் ஆகிய பொருட்களால் ஆன இவ்வரலாற்று கலைப்பொருட்கள் ஆசியவியல் சிறப்பு சேகரிப்புகளாக ஐரோப்பிய, அமெரிக்க அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்படுகின்றன. இவை மட்டுமன்றி பனை ஓலைகளால் ஆன ஓலைச்சுவடிகளும், தாள் சுவடிகளும் உலகின் பல்வேறு ஆவணப்பாதுகாப்பகங்களில் அரிய ஆவணங்களாகப் பாதுகாப்பில் உள்ளன. இவற்றோடு செப்புப்பட்டயங்களும் இணைகின்றன.

தமிழ்நாட்டின் வரலாற்றை ஆழ்ந்து ஆராயும் போது தமிழ்நாட்டின் வெவ்வேறு நிலப்பகுதிகளையும் ஆட்சி செய்த மன்னர்கள் தங்கள் அரசாணைகளைச் செப்புப்பட்டயங்களில் எழுதவைத்து அவற்றைச் சாசனங்களாக வெளியிட்ட செய்திகளை அறிகின்றோம். பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள், சேதுபதி மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் காலத்து செப்பேடுகள் இவற்றுள் அடங்கும்.

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடுகளில் உதயேந்திரத்தில் கிடைத்த முதலாம் பராந்தக மன்னனின் செப்பேடு மிகப் பழமையான சோழர்காலச் செப்பேடாக அறியப்படுகின்றது. இதே மன்னனின் வேலஞ்சேரி செப்பேடு, அதற்குப் பின்னர் சுந்தர சோழன் ஆட்சியில் வெளியிடப்பட்ட திருச்செங்கோடு செப்பேடுகள், அன்பில் செப்பேடுகள் மற்றும் பள்ளன்கோயில் செப்பேடுகள் ஆகியவை சோழர்களின் காலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடுகளில் காலத்தால் முந்தியவைகளாகக் கருதப்படுகின்றன (நடன காசிநாதன், 1989, p.150). முதலாம் ராஜராஜன் காலத்தில் வழங்கப்பட்ட கொடைகளையும் வரலாற்றுச் செய்திகளையும் விவரிக்கும் அவன் மகனான முதலாம் ராஜேந்திர சோழனின்

காலத்தில் வெளியிடப்பட்ட பெரிய லெய்டன் செப்பேடுகள் (ஆனைமங்கலம் செப்பேடு) அந்த வரிசையில் தொடர்ந்து இடம் பெறும் செப்பேடாகும். இந்தச் செப்பேட்டுடன் அதற்குச் சற்றே காலத்தால் பிந்திய, முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அவனால் வெளியிடப்பட்ட ஆனைமங்கலம் தொடர்புடைய மேலும் ஒரு செப்பேடு சிறிய லெய்டன் செப்பேடு என அழைக்கப்படுகின்றது.

இந்த இரண்டு செப்பேடுகளும் வெவ்வேறு ஆட்சி ஆண்டுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் வெளியிடப்பட்டவை என்றாலும், அவை இரண்டுமே நாகப்பட்டினத்தில் எழுப்பப்பட்ட சூடாமணி விகாரை தொடர்புடையவை என்பது நோக்கத்தக்கது. இந்த இரண்டு செப்பேடுகளும் இன்று அவை உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டில் இல்லை. மாறாக, இவை இன்று நெதர்லாந்து நாட்டின் லெய்டன் நகரில் உள்ள லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் அரிய ஆவணங்கள் பகுதியில் இருக்கின்றன. சோழமன்னர்களின் பரம்பரையை விரிவாகக் கூறும் செப்பேடு எனக் கருதப்படும் இச்செப்பேடு தமிழ்நாட்டின் அரிய வரலாற்றுச் சான்றாகும். இத்தகைய முக்கியத்துவம் பெறுகின்ற இச்செப்பேடு லெய்டன் பல்கலைக்கழகத்து நூலகத்துக்கு வந்த செய்திகளை ஆராய்ந்து அறிவது அவசியமாகின்றது. இதன் வழி மீண்டும் இச்செப்பேடுகளை அவை உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கே மீண்டும் கொண்டு சேர்க்கும் வழிமுறைகளை மேற்கொள்ள இந்த ஆய்வு உதவும்.

### ஆய்வுமுறை

மேற்குறிப்பிட்ட நோக்கத்துடன் ஆராயும் பொருட்டு லெய்டன் செப்பேடுகள் பாதுகாக்கப்படுகின்ற நெதர்லாந்தின் லெய்டன் பல்கலைக்கழக நூலகத்திற்குக் கட்டுரை ஆசிரியர் நேரடி ஆய்விற்குச் சென்று அங்கு நேரில் ஆராய்ந்து சேகரித்து வந்த தகவல்கள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன. லெய்டன் செப்பேடுகளில் உள்ள அனைத்து செப்பேட்டு வரிகளும் ஆராயப்பட்டு அவை Epigraphia Indica and record of the Archaeological Survey of India Vol. XXII 1933-34 அறிக்கையில் 1938ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இச்செப்பேடுகள் கூறும் செய்தி கே.வி.சுப்ரமணியன் அவர்களால் ஆராயப்பட்டு ஆங்கிலத்தில் ஆய்வுக்கட்டுரையாக வழங்கப்பட்டுள்ளது. அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நெதர்லாந்திலிருந்து இச்செப்பேட்டின் ஒவ்வொரு ஏடுகளையும் Prof. J.Ph. Vogel படியெடுத்து அனுப்பிவைத்ததன் அடிப்படையில் இந்த ஆய்வுக்கட்டுரையைக் கே.வி.சுப்ரமணியன் தயாரித்து வழங்கியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையின் தொடர்ச்சியாக லெய்டன் செப்பேடுகள் வெளிப்படுத்தும் சைலேந்திர மன்னர்களைப் பற்றி விளக்கும் ஒரு கட்டுரையைப் பேராசிரியர் ஆர்.சி.மஜூம்தார் வழங்கியுள்ளார். இவை இரண்டும் இக்கட்டுரைக்குத் தேவைப்படும் அடிப்படை தகவல்களை வழங்குகின்றன. இவற்றோடு லெய்டன் செப்பேடுகள் பற்றி குறிப்பிடும் வரலாற்று ஆய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் இவ்வாய்விற்குத் துணை நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் தமிழ் நாட்டின் சோழமண்டலக் கடற்கரையில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒரு துறைமுக நகரம். தாலமியின்(Ptolemy) குறிப்புக்களில் நிகமா (Nikama) என்றும் சீன பயணி ஐசிங்கின் (I-tsing) குறிப்புக்களில் நாகவதனா (Nagavadana) என்றும் இத்தாலியின் வெனீசிலிருந்து பயணித்து வந்த பயணி மார்க்கோ போலோவினால் பாதான் (Pa-tan) என்றும் ரஷிடுடின் (Rashiduddin) குறிப்புக்களில் மலிஃபத்தான் (Malifattan) என்றும், தம்மசெட்டி (Dhammaceti) கல்யாணி கல்வெட்டுக்களில் நவுதபட்டனா (Navupattana) *(பொ.ஆ.1476)* என்றும் குறிப்பிடப்படுகின்றன ப்யெ (Ramachandran, 2005, p.16). சில ஆங்கிலேய காலனித்துவ கால நூல்களும் பிரெஞ்சு ஆவணங்களும் Negapatam என்றும் குறிப்பிடுகின்றன.

ஐரோப்பிய வணிகர்கள், கத்தோலிக்க

சமய போதனையாளர்களின் வருகைக்கு முன்னரே மிக நீண்டகாலமாக முக்கிய வணிக மையமாகவும் பௌத்த மையமாகவும் நாகப்பட்டினம் திகழ்ந்திருக்கின்றது. நாகப்பட்டினத்திலுள்ள வெள்ளிப்பாளையத்திலும் நாணயக்காரசாலையிலும் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் 350க்கும் குறையாத செப்பு பௌத்த சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டன. தென்னிந்தியாவில் குறிப்பாக, தமிழ்நாட்டின் வரலாற்றில் மறக்கப்பட்ட செய்திகளை மீட்டெடுக்க இந்த அகழாய்வுக் கண்டுபிடிப்புகள் சான்றுகளாகின்றன (Ramachandran. 2005. p.16). பொ.ஆ. 871 1025 வரையிலான காலகட்டம் என்பது ஸ்ரீவிஜயப் பேரரசின் புகழ் தெற்காசிய நாடுகளில் உயர்ந்து பரவியிருந்த காலகட்டமாகும். பொ.ஆ. 1025-1250இல் சோழப்பேரரசின் தாக்குதலுக்குட்பட்டு இப்பேரரசு புகழ் மங்கிய காலமாகும்.

பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு வாக்கில் தமிழகத்தில் பௌத்தமும் சமணமும் செழிப்புற்று இருந்த காலமாகும். அதன் பின்னர் ஏற்பட்ட தென்னிந்திய ஆட்சி, அரசியல் சூழலின் மாற்றத்தால் பௌத்த சமயச் சுவடுகள் மறையத் தொடங்கின. சைவமும் வைணமும் இக்கால கட்டத்தில் வளர்ச்சி கண்டன. இந்தச் சூழலில் ஸ்ரீவிஜயப் பேரரசை ஆண்டுகொண்டிருந்த மன்னர்கள் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரையை எழுப்ப விரும்பி சோழப் பேரரசின் அனுமதியையும் உதவியையும் பெற்றனர்.

பண்டைய இந்தோனேசியா, மலாயா பகுதிகளை ஆட்சி செய்த ஸ்ரீவிஜயப் பேரரசின் சைலேந்திர மலாய் பௌத்த தொடர்புகள் நாகப்பட்டினத்தில், இடைப்பட்ட காலத்தில் மறைந்து போன பௌத்த சமய மறுமலர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தன. இந்த முயற்சிகளுக்குப் பாதுகாப்பும், ஆதரவும் சோழ மன்னர்களிடமிருந்து தாராளமாகக் கிடைத்தன என்பதை பெரிய லெய்டன் செப்பேடுகளும் சிறிய லெய்டன் செப்பேடுகளும் சான்று பகர்கின்றன.

சோழ மன்னர்களின் நன்கொடை உதவியுடன் ஸ்ரீவிஜய மன்னர்கள் பொ.ஆ.11ஆம் நூற்றாண்டில் இரண்டு பௌத்த விகாரைகளை நாகப்பட்டினத்தில் கட்டினர். அவை ராஜராஜ பெரும்பள்ளி (அல்லது சூடாமணிவர்ம விகாரை-Cudamanivarma-Vihara ) என்றும் ராஜேந்திர சோழ பெரும்பள்ளி (சோழப் பெரும்பள்ளி) என்றும் ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன. சூடாமணிவர்ம விகாரை ஸ்ரீவிஜயப் பேரரசின் கடாரத்தை (இன்றைய கெடா) ஆண்ட கடாரத்தின் (Kataha- Kadaram) மன்னன் ஸ்ரீமாறவிஜயதுங்கவர்மனால் அவனது தந்தை சூடாமணிவர்மனின் நினைவாக எழுப்பப்பட்டது. சில குறிப்புகள் சூடாமணி விகாரையைப் புதுவேலி கோபுரம் என்றும், சீன பகோடா என்றும் அழைக்கின்றன (Ramachandran, 2005, p.17). மிக நீண்டகாலமாக களங்கரை விளக்கம் போல நாகப்பட்டினம் கடற்கரை பகுதி கடல் வணிகர்களுக்கும், பயணிகளுக்கும் காட்சியளித்த இந்த பௌத்த விகாரை பொ.ஆ. 1867ஆம் ஆண்டில் பிரஞ்சு கத்தோலிக்க மதபோதகர்களால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது (Ramachandran, 2005, p.19).

புதுச்சேரியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட கத்தோலிக்க குருமார்கள் நாகப்பட்டினத்தில் சிதைந்த சூடாமணி விகாரைக்கு அருகே தங்கியிருந்தனர். அவர்கள் அப்பகுதியில் தங்கள் கல்விசார்ந்த செயல்பாடுகளுக்காக இந்த விகாரையை உடைத்து தரைமட்டமாக்க ஆங்கிலேய அரசுக்கு விண்ணப்பித்தனர். அதன் அடிப்படையில் 28.8.1867ஆம் ஆண்டில் இதற்குச் சம்மதம் தெரிவித்து ஆங்கிலேய அரசு ஒப்புதல் அளித்தது. அக்கத்தோலிக்க குருமார்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே சிதலமடைந்திருந்த இந்த பௌத்த விகாரையை உடைத்துத் தரைமட்டமாக்கினர். (Rangarajan, 2014)

[2]குறிப்பு: கூடாமணி விகாரை, சூடாமணிவர்ம விகாரை, சூளாமணி விகாரை என்ற பெயர்களில் இந்த விகாரை செப்பேடுகள், கல்வெட்டுக்கள், நூல்கள், ஆய்வுக்குறிப்புகளில் பதியப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் சூடாமணி விகாரை மாறவிஜயோத்துங்கவர்மனால் அவன் தந்தையின் நினைவாகக் கட்டப்பட்டது. சோழ மன்னன் முதலாம் ராஜராஜனின் 21ம் ஆட்சி ஆண்டில், அதாவது பொ.ஆ.1006இல் ஆனைமங்கலம் கிராமத்தின் வருவாய் இந்த சூடாமணி விகாரை பராமரிப்பிற்காக வழங்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுகின்றான் மாமன்னன் ராஜராஜன். (Ray, 1954, p.179) இது அவன் மகனான ராஜேந்திர சோழனின் ஆனைமங்கலம் பெரிய செப்பேட்டில் உள்ள செய்திகளால் உறுதி செய்யப்படுகிறது. ஆகவே, இச்செப்பேட்டில் உள்ள தகவலின் படி சூடாமணி விகாரை பௌத்த பெரும்பள்ளி கட்டும் பணி பொ.ஆ. 1006ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்பதை அறிகின்றோம். மாறவிஜயோத்துங்கவர்மன் இதற்கடுத்த சில ஆண்டுகளில் அதாவது பொ.ஆ 1008ஆம் ஆண்டில் காலமாகிறான். அவனுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்கும் அவன் மகன் சங்ரம விஜயதுங்கவர்மன் (Sangrama Vijayatunggavarman) இப் பௌத்தப்பள்ளியை அமைக்கும் பணியை 1008ஆம் ஆண்டில் தொடர்கின்றான். (Ramachandran, 2005, p.21)

மாமன்னன் ராஜராஜ சோழன் காலத்தில் ஸ்ரீ விஜய பேரரசுக்கும், சோழப்பேரரசுக்கும் நல்ல நட்புறவு இருந்தமையை இந்தக் கொடை மற்றும் அதனை விளக்கும் செப்புச்சாசனம் உறுதி செய்கின்றது. ஆனால் இந்த நிலை ராஜேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் மாற்றம் அடைவதைக் காண்கின்றோம்.

முதலாம் ராஜேந்திர சோழனின் 13ம் ஆட்சி ஆண்டில், அதாவது பொ.ஆ 1025ஆம் ஆண்டு கல்வெட்டு ராஜேந்திர சோழன் ஸ்ரீவிஜய மன்னனுக்கு எதிராக மேற்கொண்ட கடற்படை தாக்குதலைப் பற்றி விவரிக்கின்றது. இக்காலகட்டம் சோழப் பேரரசு கிழக்காசியாவின் மிகப்பெரிய கடற்படையாக வளர்ச்சி கண்ட காலகட்டமாகும். வீரராஜேந்திரனின் ஆட்சி காலத்தில், அதாவது பொ.ஆ 1068இல் கடாரத்தை மீண்டும் சோழப்படைகள் தாக்கி கைப்பற்றின என்ற செய்தியும் கிட்டுகின்றது (Ramachandran, 2005, p.21). முதலாம் வீரராஜேந்திரனின் ஆட்சிக் காலமான பொ.ஆ 1068இல் சோழக்கடற்படைகள் ஸ்ரீவிஜயப் பேரரசின் கடாரத்தின் மீது மீண்டுமொரு தாக்குதலைக் கொடுத்தன (Raj Chatterjee, 1933, p.26).

இடையில் கடாரத்தில் ஏற்பட்ட அரசியல் நிலைத்தன்மையற்ற போக்கினால் கடாரத்தில் சோழ அரசின் பிரதிநிதிகள் வலுவிழந்து அதன் விளைவாக ஸ்ரீவிஜயப் பேரரசு மீண்டும் தன் ஆளுமையை நிலைநிறுத்த முயற்சித்திருக்கலாம். இதனை எதிர்கொள்ள வீரராஜேந்திரனின் படைகள் மீண்டும் கடாரத்தைத் தாக்கிக் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கடாரத்தைக் கொண்டு வந்திருக்கலாம் என்ற ஊகத்திற்கும் வாய்ப்புள்ளது.

அதன் பின்னர் ஸ்ரீவிஜய மன்னனுக்குக் கடாரத்தை அளித்துப் பாதுகாத்தான் என்ற செய்தியும் கிடைக்கின்றது (Ramachandran, 2005, p.21). இதன் வழி மீண்டும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்கும் சோழப் பேரரசுக்கும் இடையிலான உறவில் மீண்டும் நட்பு பிறக்க வழி ஏற்பட்டதையும் காண்கின்றோம். இதன்வழி சோழப்பேரரசின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு சோழப்பேரரசின் ஆதிக்கத்திற்குள் வருகின்ற அரசாக நீடித்த நிலை ஸ்ரீவிஜயப் பேரரசுக்கு ஏற்பட்டது என்றும் புரிந்து கொள்ளலாம்.

### லாபூ தோவா கல்வெட்டு

மேற்கூறிய செய்திகளின் அடிப்படையில், நட்புறவுடன் கூடிய வணிக மற்றும் சமய உறவுகள் தமிழ்நாட்டிலும் ஸ்ரீவிஜயப் பேரரசின் ஆளுமைக்குட்பட்ட நிலப்பகுதிகளான கடாரம் (மலாயா) சுமத்ரா (இந்தோனேசியா) தீவுகளிலும் மீள்கட்டமைக்கப்பட்டன. இதற்குச் சான்றாக இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் லாபூ தோவா (Loboe Toewa / Lobu Tua) பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பொ.ஆ 1088ஆம் ஆண்டு தமிழ்க் கல்வெட்டு தமிழ் வணிகர்களான திசை ஆயிரத்து ஐநூற்றுவர் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. மிகக் குறிப்பாக இக்கல்வெட்டு `திசை ஆயிரத்து ஐநூற்றுவர்` என்ற பெயர்கொண்ட தமிழ்

வணிகக் குழுக்களின் செயல்பாடுகளை விவரிக்கின்றது. (Endjat Djaenuderadjat, 2013, p.15)

தற்சமயம் இக்கல்வெட்டு இந்தோனேசியாவின் ஜகார்த்தா தீவில் உள்ள இந்தோனேசிய தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது (Susanto Zuhdi, *1993*, p.*71*). சுமத்ரா தீவின் வட பகுதி நகரமான பாரூஸ் நகரிலேயே தமிழ்நாட்டின் தமிழ் வணிகர்கள் குடியிருப்பை அமைத்துக்கொண்டு தங்கியிருந்து வணிகம் செய்தனர் என்றும், அவர்கள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்கவரி நிர்ணயித்தனர் என்பதையும், அவர்கள் இறக்குமதி செய்த வணிகப் பொருட்களைப் பற்றியும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. (Endjat Djaenuderadjat, 2013, p.100). ஆக, இக்காலகட்டத்தில் சோழப் பேரரசுக்கும் மலாயாவின் ஸ்ரீவிஜயப் பேரரசை ஆண்ட மன்னர்களுக்குமான உறவு நட்புடன் இருந்தமையையும், வணிக நடவடிக்கைகளைச் சோழ வணிகர்கள் இப்பகுதிகளில் விரிவாக மேற்கொண்டமையையும் இக்கல்வெட்டு சான்று பகர்கின்றது.

### லெய்டன் பல்கலைக்கழக நூலகம்

பெரிய லெய்டன், சிறிய லெய்டன் செப்பேடுகள் (ஆனைமங்கலம் செப்பேடுகள்) இரண்டும் தற்சமயம் லெய்டன் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் உள்ள அரிய ஆவணங்கள் பகுதியில் பாதுகாக்கப்படுகின்றன. இந்தப் பெரிய லெய்டன் மற்றும் சிறிய லெய்டன் செப்பேடுகளுடன் மேலும் இந்தோனிசியாவின் ஜாவாவிலிருந்து டச்சுக்காரர்கள் தங்களது காலனித்துவ ஆட்சியின் போது சேகரித்துக் கொண்டு வந்த சமஸ்கிருத செப்பேடுகள் சிலவும், களிமண்ணால் செய்யப்பட்ட ஓட்டின் மேல் கீறப்பட்ட சமஸ்கிருத ஆவணங்களும் இடம் பெறுகின்றன.

நெதர்லாந்தில் பாதுகாக்கப்படும் பெரிய லெய்டன் சிறிய லெய்டன் என அழைக்கப்படும் செப்பேடுகள் Or.*1687* மற்றும் Or.*1688* என அடையாள எண்ணிட்டு பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆனைமங்கலம் செப்பேடுகளையும் இந்தியாவிலிருந்து நெதர்லாந்துக்குக் கொண்டு வந்தவர் ஃப்லோரெண்டியூஸ் காம்பெர் (Mr.Florentius Camper) என்பவராவார். கிழக்கிந்திய டச்சுக் கம்பெனியின் ஆட்சிக்குட்பட்டிருந்த பட்டாவியா அரசு என்பது இந்தோனிசியா மற்றும் மலாயா தீவுக்கூட்டங்கள் அடங்கிய ஒரு பெரும்பகுதி.

ஃப்லோரெண்டியூஸ் காம்பெர் *1702*லிருந்து *1713* வரையிலான காலகட்டத்தில் இந்தப் பட்டாவியா அரசில் சமயத்துறைக்கான அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். அக்காலகட்டத்தில் அவர் தமிழ்நாட்டிலிருந்து சேகரித்தவைதாம் இந்த ஆனைமங்கலம் செப்பேடுகள். ஃப்லோரெண்டியூஸ் காம்பெர் ஹமாக்கர் (Hamaker) பரம்பரையில் திருமணம் செய்து கொண்டார். அந்த வகையில் இச்செப்பேடுகள் பேராசிரியர் ஹெச்.ஏ ஹமாக்கர் (H.A.Hamaker) கைவசம் வந்தன.

ஆனைமங்கலம் செப்பேடுகள் என அழைக்கப்படும் இந்தச் செப்பேடுகள் லெய்டைன் பல்கலைக்கழகத்தின் முதல் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர் ஹெச்.ஏ ஹமாக்கர் (H.A.Hamaker) என்பவர் வசம் இருந்தன. இவர் *1835*ம் ஆண்டு காலமானார். இவரது வாரிசுகள் இந்த ஆனைமங்கலம் செப்பேடுகளை *1862*ம் ஆண்டு லெய்டன் பல்கலைக்கழக நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கினர்.

Or.*1687* என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பெரிய லெய்டன் செப்பேடுகள், *21* செப்புப்பட்டயங்களை உள்ளடக்கிய தொகுதி. இவற்றுள் *16* செப்புப்பட்டயங்கள் தமிழிலும் ஏனைய *5* சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு தனிச்செப்பேடும் செப்பு வளையத்தால்

---

[3]குறிப்பு: கட்டுரையாசிரியர் 2.8.2021 லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தில் நேரடியாக இச்செப்பேடுகளை ஆய்வு செய்து வந்ததன் அடிப்படையில் செய்திகள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன

பிணைக்கப்பட்டு சோழச் சின்னம் பொறிக்கப்பட்ட செப்பு முத்திரையுடன் பிணைக்கப்பட்டுள்ளன. முத்திரையை இணைக்கும் வளையம் அமைந்திருக்கும் பகுதியில் தெளிவாக வாசிக்கக் கூடிய வகையில் வளையத்தின் மேற்பகுதியில் தமிழில் `ஆனைமங்கலம்` எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பெரிய லெய்டன் செப்பேட்டுத் தொகுதி ஏறக்குறைய 20 கிலோ எடைக்கு மேல் இருக்க வாய்ப்புள்ளது.

Or. 1688 என அடையாளப்படுத்தப்படும் சிறிய லெய்டன் செப்பேட்டுத் தொகுதி மூன்று செப்பேடுகளைக் கொண்டிருக்கின்றது. செப்பேட்டில் உள்ள வாக்கியங்களுக்கான எண்கள் குறிப்பிடப்படவில்லை. இது முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடாகும். இது முழுமையாகத் தமிழில் செதுக்கப்பட்ட செப்பேடு. மூன்று தனிச்செப்பேடுகளும் செப்பு வளையத்தால் பிணைக்கப்பட்டு,

சோழர் முத்திரை பதிக்கப்பட்டு பிணைக்கப்பட்டுள்ளன. இச்செப்பேடு சோழன் ராஜகேசரிவர்மன், அதாவது முதலாம் குலோத்துங்கனின் 20ம் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இச் சிறிய லெய்டன் செப்பேடு சூடாமணி விகாரை பௌத்த பள்ளிக்கு அளிக்கப்பட்ட கொடையை முதலாம் குலோத்துங்கன் காலத்தில் உறுதி படுத்தும் வகையிலும் மேலும் கடாரத்து அரையனின் தூதன் ராஜவித்யாதர ஸ்ரீசாமந்தனும் அபிமானதுங்க ஸ்ரீசாமந்தனும் விண்ணப்பித்தபடி, முன்னர் சாசனத்தில் கொடுக்கப்பட்ட தானத்தைப் பள்ளிச்சங்கத்தாருக்கே வழங்கும் வகையிலும் இச்செப்பேட்டு அரசாணை (தாமிரசாசனம்) செய்யப்பட்டுள்ளது.

1938ஆம் ஆண்டு Archeological Survey of India வெளியிட்ட Epigraphia Indica and record of the Archaeological Survey of India Vol. XXII 1933-34 நூலில் பெரிய லெய்டன், சிறிய லெய்டன் செப்பேடுகளில் உள்ள செய்திகள் ஆய்வறிக்கையாக கே.வி.சுப்ரமணியன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டன. இந்த ஆய்வுக்குத் தேவைப்பட்ட இச்சேப்பேடுகளின் மைப்படிகளை நெதர்லாந்திலிருந்து Prof. J.Ph. Vogel படியெடுத்து அனுப்பியிருந்தார். செப்பேட்டிலுள்ள ஒவ்வொரு வரிகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்த அறிக்கையில் அவர் வழங்கியிருக்கின்றார். அதனடிப்படையில், இந்நூலில் வழங்கப்பட்டுள்ள இச்செப்பேட்டு வரிகள் கூறும் செய்திகளைக் காண்போம்.

### ஆனைமங்கலம் பெரிய லெய்டன் செப்பேடு

#### சமஸ்கிருதப் பகுதி

(Archeological Survey of India வெளியிட்ட Epigraphia Indica and record of the Archaeological Survey of India Vol. XXII 1933-34, P 255)

குறிப்பு: பெருமைகூறும் வகையிலும் அழகியல் செய்திகளாகவும் உள்ள வரிகள் நீங்க இக்கட்டுரைக்குத் தேவைப்படும் செப்பேட்டு வரிகள் மட்டும் இங்கு வழங்கப்படுகின்றன.

- *8 ராஜகேசரி, பரகேசரி என்னும் பெயர்கள் சோழ மன்னர்களின் பரம்பரையில் பிறந்தவர்களுக்கு அடுத்தடுத்து வழங்கப்படும் பெயர்களாக அமைகின்றன.*
- *11 சோழர் பரம்பரையில் மன்னன் கரிகாலன் பிறந்தான். தனது எதிரிகளுக்கு மரணத்தை விளைவிப்பவன் இவன். இவன் காவிரியில் அணையைக் கட்டியவன்.*
- *12 இந்தப் பரம்பரையில் பிறந்தவன் வெற்றிகள் நிறைந்த விஜயாலயன். இவன் உலகை வென்றவன். அவனது தாமரை மலர்களை ஒத்த பாதங்களை அவனுக்கு முன்னர் ஆட்சி செய்த மன்னர்களின் வளம் ஒளி பாய்ச்சுகின்றது.*
- *14 இவனுக்கு அடுத்து ஆட்சி செய்தவன் ஆதித்யன் (சூரியன்); இவன் மிகப் பலம் பொருந்தியவன். இருளையும் எதிரிகளையும் அழித்து ஒழித்தவன்.*
- *15 இவனைத் தொடர்ந்து வருபவன் மன்னன் பராந்தகன். அளவில்லா ஆற்றலைக் கொண்டவன்; உலக*

நன்மைக்காகத் தோன்றியவன்; நிலவு தனது ஒளிக்கதிர்களால் உலகுக்கு ஒளிபாய்ச்சுவது போல பாற்கடலிலிருந்து உலகுக்கு மகிழ்ச்சியை அளிக்க வந்தவன்.

- 16 இவன் உலகைக் கைப்பற்றி, சூரியக்கதிர்கள் தோன்றும் நேரம் முதல் மறையும் வரை அமைதி நிலவும்படி உலகை ஆட்சி செய்தான். இவன் பெரு நகரங்களை உருவாக்கினான்;
- 17 அவன் வெற்றி கண்ட பகுதிகளிலிருந்து கைப்பற்றிக் கொண்டு வந்த தூய தங்கத்திலிருந்து வியாக்ரக்ரஹாரத்தில் (சிதம்பரம்) சிவலிங்கத்திற்குப் பொன்வேய்ந்தான்.
- 19 உலகின் எல்லா அரசர்களும் காலில் வீழ்ந்து வணங்கும் இந்த மன்னனுக்கு மூன்று மகன்கள் பிறந்தனர்; அவர்கள் ராஜாதித்யன், கண்டராதித்யன், அரிஞ் சயன்.
- 20 ராஜாதித்யன் போரின் போது கிருஷ்ணராஜாவின் வில்லம்பு மார்பில் துளைத்து மாண்டான்
- 21 ராஜாதித்யன் மறைந்த பின்னர் கண்டராதித்யவர்மன் உலகை இருளிலிருந்து பாதுகாத்தான் (ஆட்சி செய்தான்)
- 22 அவனுக்கு மதுராந்தகன் என்ற மகன் இருந்தான். அவன் பெயரில் காவேரியின் வடகரையில் ஒரு நகரை எழுப்பினான்; அதன் பின்னர் அவன் காலமானான்.
- 23 அவன் மறைவுக்குப் பின்னர் அரிஞ் சயன் ஆட்சிப் பொறுப்பேற்றான்.
- 24 அரிஞ்சயன் கடல் சூழ்ந்த தன் நாட்டை அமைதி நிலவும்படி ஆட்சி செய்தான்; அவனுக்குப் பராந்தகன் என்ற பெயர் கொண்ட மகன் பிறந்தான்.
- 25 பராந்தகன் மலையும் நதிகளும் சூழ்ந்த தன் நாட்டை வளமாக்கி எதிரிகளின் யானைகளைத் தனது கூறான வாளால் வெட்டி வீழ்த்தி சிறந்த ஆட்சி செய்தான்.
- 26 பராந்தகனுக்குக் கரிகாலன், ராஜராஜன் என்ற இரு மகன்கள்; இவர்கள் சூரியக் கூட்டத்தின் மகுடம் போன்றவர்கள்.
- 27 பராந்தகன் மறைந்த பின்னர் ஆதித்யா (ஆதித்த கரிகாலன்) உலகத்தை காக்கும் பொறுப்பை ஏற்றான்.
- 28 இந்த இளம் வீரன் (ஆதித்யா), குடும்பத்தின் விளக்கானவன், போர்க்களத்தில் வீரபாண்டியனை எதிர்கொண்டு வென்றான்.
- 29 இவன் இறந்த பின் கண்டராதித்தனின் மகன் மதுராந்தகன் ஆட்சிப் பொறுப்பேற்றான்.
- 30 அவன் மறைந்த பின்னர், சோழப் பரம்பரையின் ஒளிவிளக்கு ராஜராஜன் உலகைக் காக்கும் பொறுப்பை ஏற்றான்.
- 31 இவன் பாண்டியர்களை வென்றும் துளு, கேரளம், இலங்கை சத்யஸ்ரய நாடுகளை வென்றும் அந்நாடுகளிலிருந்து யானைகளையும் குதிரைகளையும், விலையுயர்ந்த கற்களையும் கொண்டு வந்து தன் நாட்டை வளப்படுத்தினான்.
- 32 பெரிய வெற்றிகளை ஈட்டிய ராஜராஜன் மகிழ்ச்சியாக தன் மக்கள் இந்திரன் போல கொண்டாடும்படி வாழ்ந்தான்.
- 34 (7386) கடல்கடந்து பல நாடுகளைக் கண்ட ராஜகேசரிவர்மன் ராஜராஜன் தனது 21வது ஆட்சி காலத்தில் சாசனம் ஒன்றை படைத்தான். இச்சாசனம், சூளாமனிவர்ம விகாரை என்ற பௌத்தக் கோயிலை நாகப்பட்டினத்தில் சைலேந்திரா அரச பரம்பரையில் பிறந்த புகழ்மிக்க மாறவிஜயோத்துங்கவர்மனுக்கு கட்டிக்கொள்ள அளிக்கும் சாசனம். இவன் கடாரத்தை ஆள்பவன். சூளாவனிவர்மனின் மகனுக்கு

ஆனைமங்கலம் என்ற பெயர்கொண்ட கிராமத்தை அளித்தான்.

- *3536 ராஜராஜன் மறைவுக்குப் பின் அவன் மகன் மதுராந்தகன், அவன் தந்தை அளித்த கொடையைத் தொடரும் வகையில் அதன் தொடர்ச்சியாக ஒரு சாசனத்தை எழுத ஆணையிட்டான்.*

*குறிப்பு: செப்புப்பட்டயத்தை எழுதிய ஊழியர்கள் தங்கள் பெயர்களை கீழ்க்காணும் வகையில் பதிந்திருக்கின்றனர்.*

- *4344 கடாரத்தின் தலைவன் ஸ்ரீமான் அதிகையின் மகன், இவன் துவவுரவன் அனுகா என்ற பெயர் கொண்டவன்; இந்தச் செப்புப்பட்டயம் எங்களால் எழுதப்பட்டது. வளமிக்க ஜெயங்கொண்டசோழமங்கலம் காஞ் சிபுரத்தில், கிருஷ்ணன் வாசுதேவன் என்ற ராஜராஜபேராச்சாரியன், கிருஷ்ணன் திருவரங்கன், கிருஷ்ணன் தாமோதரன், வாசுதேவன் கிருஷ்ணன், அரவாமிர்து புருஷோத்தமன். (குறிப்பு: செப்புப்பட்டயம் எழுதும் தொழிலைச் செய்வோர்)*

## தமிழ்ப்பகுதி

*வரி எண் 1லிருந்து 166 வரை ஆனைமங்கலம் கிராமத்தின் எல்லைகளை விவரிக்கின்றது. கடார மன்னன் கட்டும் சூடாமணிவிகாரை பள்ளிக்கு வரியில்லாமல் வழங்கப்பட்ட நிலத்தின் அளவை விவரிக்கின்றது. ஆனைமங்கலம் கிராமத்திலிருந்து வழங்கப்பட வேண்டிய நெல், வருவாய் ஆகியவற்றையும் இப்பகுதி விவரிக்கின்றது. ஆனைமங்கலம் கிராமத்தில் உள்ள ஓடைகள், வாய்க்கால்கள், குடியிருப்புகள் ஆகியவை பற்றிய குறிப்புகள் நுணுக்கமாக விவரிக்கப்படுகின்றன.*

*வரி எண் 167லிருந்து நன்கொடை பெறுபவருக்கு உரிமையானவை: ஈர நிலங்கள், காய்ந்த நிலங்கள், கிராமம், கிராமத்தின் அருகாமை பகுதிகள், புனித கோயில்கள், பறையர் குடியிருப்புகள், சிற்பிகள் கலைஞர்களின் குடியிருப்புகள், ஈமக்கிரியைப் பகுதி ஆகிய நான்கு எல்லைகளுக்குள் உட்பட்ட பகுதிகள்.*

*வரி எண் 169 லிருந்து ஆனைமங்கலம் கிராமத்தின் சாசனம் எழுதப்பட்டபோது இருந்த நிலை. கண்மாய்கள், வீடுகள், வீட்டின் புறப்பகுதிகள், கடைகள், கடைப்பகுதிகள், மக்கள் கூடும் இடங்கள், மாடுகள் புல் மேயும் தரிசு நிலங்கள், குளங்கள், கோட்டைபகுதிகள், பள்ளத்தாக்குகள், கிணறுகள், குன்றுகள், காட்டுப் பகுதிகள், நிலங்கள், ஆறுகள், ஆற்றின் கரையில் இருக்கும் நிலங்கள், மீன்கள் நிறைந்த ஓடுகள், தேனீக்கள் நிறைந்த பூந்தோட்டங்கள் (தேன் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்டவை) உயர்ந்து வளர்ந்த மரங்கள், உடும்புகளும் ஆமைகளும் தவழ்ந்து விளையாடும் பகுதிகள்.*

*வரி எண் 176 லிருந்து ஆனைமங்கலம் கிராமத்தில் விவசாயம் செழிக்க கண்மாய்கள் உருவாக்கப்பட வேண்டும்; கழிவு நீர் சேகரிக்கப்பட்டு முறையாக அவை செல்வதற்காக உருவாக்கப்பட்ட பிரத்தியேக வாய்க்கல்கள் வழியாக நீர் செல்ல வேண்டும். தற்போது இருக்கின்ற நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்; மேம்படுத்தப்பட வேண்டும்; கண்மாய்களில் தனி நபர்கள் வாய்க்கால் வெட்டிக் கொள்ளவோ, தடுப்பு அணை ஏற்படுத்தவோ அனுமதி இல்லை; குடிநீர் பயன்பாட்டிற்கு உள்ள நீர்நிலைகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது; இவை அணைகட்டப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்.; சுட்ட செங்கற்களால் வரி எண் பெரிய அரங்கங்கள் கட்டப்பப்பட வேண்டும். தென்னை மரங்கள் பெரிய அளவில் தோட்டங்களாக நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.; தாமனக்கா, மருவு, இருவேலி, செண்பகம், செங்களுநீர், மா, பலா, பனை, கொடி அதோடு பயனுள்ள தாவரங்களும் மரங்களும் நட்டு வளர்க்க வேண்டும்; பெரிய எண்ணை பிழியும் செக்கு உருவாக்கப்பட வேண்டும்; இந்தக் கிராமத்தில் ஓடும் ஆற்று நீர் இதற்கு அடுத்த கிராமங்களில் கடந்து ஓடும் வகையில் பாதுகாக்க வேண்டும்; இளையோர் பனை மரங்களிலும் தென்னை மரங்களிலும் ஏறாமல் பார்த்துக் கொள்ள*

வேண்டும்; பெரிய பறைகளும் கலைநயம் பொருந்திய மூன்று வரிசைகளில் அமைந்த எல்லை வளைவுகளும் குடும்பத்தினரின் பண்பாட்டுப் பின்புலத்திற்கு ஏற்றவகையில் அனுமதிக்கப்படும்.

வரி எண் 191 லிருந்து இந்த மேற்குறிப்பிட்ட நிலத்தைப் பெறும் போது கீழ்க்காணும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. நாடாட்சி (மாவட்ட ஆட்சிக் கட்டணம்), ஊராட்சி (கிராம ஆட்சிக் கட்டணம்), வட்டிநல்லி (ஒரு கூடை நல்லி பயிர்), கண்ணாலக்காணம் (ஒவ்வொரு திருமண நிகழ்வின் போது கிடைக்கும் தங்கத்தில் ஒரு கணம் தங்கத்திற்கான கட்டணம்), வண்ணாரப்பறை( துணி துவைப்போரின் கல் வரி), குசக்காணம் (மண்பாண்டம் செய்யும் குயவர்கள் கட்டும் கட்டணம்), தறிப்புடவை ( ஒவ்வொரு தறியில் உருவாக்கப்படும் புடவைகளில் ஒன்று), தரகர் கட்டணம், பொற்கொல்லர் கட்டணம், கால்நடை மேய்ப்பாளர் கட்டணம், ஆட்டுக்கீரை( ஆட்டு மந்தைகளை வைத்திருப்போர் கட்டணம்), நல்ல பசுமாடு, நல்ல காளை மாடு, நாட்டுக்காவல்( மாவட்டத்தைக் காவல் காப்பதற்கானக் கட்டணம்) ஊடுபோக்கு, விற்பிடி, வாலமஞ்சடி, உழ்கு, ஓடக்கூலி (படகுக்கூலி), சாலைவரி, மன்றுப்பாடு (மன்றங்கள் நிகழ்த்த சேகரிக்கப்படும் தொகை), மாவிரை, தீயெரி, மற்றும் ஏனைய கட்டணங்கள் பொதுவாக அரசால் வசூலிக்கபடுவன; ஆனால் இந்தக் கிராமத்தில் இவற்றை மன்னர் பெறக்கூடாது; மாறாக இந்தக் கிராம வரிகள் அனைத்தும் வருவாயாக சூடாமணி விகாரை பள்ளிக்கு அளிக்கப்படவேண்டும்.

வரி எண் 198 லிருந்து சூடாமணி விகாரையும் பள்ளியும் அமைக்கப்பட்டுள்ள நிலத்திற்கு வரி வசூலிக்கப்படாது. தனது 21ம் ஆட்சி ஆண்டில் இந்தப் பரிசை ராஜராஜன் சாசனம் செய்து அளித்தார்; சத்திரிய குல வளநாட்டின் பட்டனக்கூற்றத்தில் இந்த விகாரை அமைக்கப்படுகிறது. பெண்யானை மேல் ஏறி பவனி வந்து இந்தக் கொடையைக் கூறும் பத்திரத்தை மன்னன் அளித்தான். இந்த நிகழ்வின் போது ஆனையன் தளிக்குளவன் (கள்ளிக்குடி இப்பகுதியில் வாழும் ஒருவன்) மற்றும் புறவுரரி (அலுவலகர்) மற்றும் அப்பகுதியின் பிரதிநிதிகள் இணைந்து வந்து எல்லைக்கல்லை நட்டுவைத்து கையெழுத்திட்டு இந்தக் கொடை பத்திரத்தை வழங்கினர்.

வரி எண் 207 லிருந்து மன்னன் யானையில் பவனி வந்து இந்தச் சாசனத்திற்குட்பட்ட ஆனைமங்கலம் கிராமத்தின் எல்லைகளைப் பார்வையிட வந்தபோது, ஆனைமங்கலம் கிராமத்தில் வசிக்கும் கோன் புட்டன் என்ற பெயர் கொண்ட வெள்ளாளன், ஒரு யானை மீது ஏறி சவாரி செய்து வந்து எல்லைகளைக் காட்டினான். அவன் கையெழுத்து.

வரி எண் 210 லிருந்து ஷத்திரியசிகாமணி வளநாட்டின் பட்டனக்கூற்றத்தின் பகுதியில் உள்ள பிரம்மதேயமாகிய கடம்பானூர் மன்றத்தின் உறுப்பினராகிய நாங்கள் எல்லைகளைப் பார்வையிட்டு இந்தக் கொடை வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்கின்றோம். நான் முப்பாத்திருவன் யஜ்னன் என்ற கற்பகாதித்தன் (பிரம்மதேயத்தின் நடுவர்/பொறுப்பாளர்) என் கையெழுத்து; கடம்பானூர் கிராமத்தின் மக்கள் பிரதிநிதி நாராயணன் தாமோதரன் இங்கே கையெழுத்துடுகிறேன்.

வரி எண் 215 லிருந்து ஷத்திரியசிகாமணி வளநாட்டின் பட்டனக்கூற்றத்தின் பகுதியில் உள்ள பிரம்மதேயமாகிய நாராயணமங்கலம் மன்றத்தின் உறுப்பினராகிய நாங்கள் எல்லைகளைப் பார்வையிட்டு இந்தக் கொடை வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்கின்றோம். நான் இருநூற்றுவன் உத்தமன் என்ற பிரம்மமாங்கல்யன் (பிரம்மதேயத்தின் நடுவர்/பொறுப்பாளர்) என் கையெழுத்து.

வரி எண் 218 லிருந்து இதன் படி வேளாங்குடி ஊரராகிய நாங்கள் இந்தச் சாசனப் பத்திரத்தை அளிக்கிறோம். நான் வேளாங்குடையன் நாராயணன் வேளாங்குடி (ஷத்திரியசிகாமணி வளநாட்டின் பட்டனக்கூற்றத்தின் பகுதி ஒன்றியம்) கிராமத்தின் பிரதிநிதியாக கையெழுத்திடுகிறேன்.

வரி எண் 221 லிருந்து ஷத்திரியசிகாமணி வளநாட்டின் பட்டனக்கூற்றத்தின் பகுதியில் உள்ள பிரம்மதேயமாகிய மூங்கிற்குடி மன்றத்தின் உறுப்பினராகிய நாங்கள் எல்லைகளைப் பார்வையிட்டு இந்தக் கொடை வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்கின்றோம். நான் குணவாநந்தி என்ற அலங்காரப்பிரியன் (பிரம்மதேயத்தின் நடுவர்/பொறுப்பாளர்) என் கையெழுத்து. தொடர்ந்து மேற்குறிப்பிட்ட வரிகளில் உள்ள 'ஷத்திரியசிகாமணி வளநாட்டின் பட்டனக்கூற்றத்தின் பகுதியில் உள்ள:

- 224 - நரிமன்றத்து ஊராராகிய, நான், ஐம்பத்திருவன் விடேல்விடுங்கன், என் கையெழுத்து.
- 228 - சட்டமங்கலம் ஊராராகிய, நான், வேட்கோவன் எதிரன் சாத்தன் என்ற நானூற்றுப்பெருங்கோவேளன், என் கையெழுத்து.
- 232 - சன்னமங்கலம் பிரம்மதேயத்து சபையின், நான் துருக்கன் கமுதன், என் கையெழுத்து.
- 236 - கொட்டாரக்குடி பிரம்மதேயத்து சபையின், நான் ஊரன்சந்திரசேகரன் என்ற பிரம்மமாங்கல்யன், என் கையெழுத்து.
- 239 - கோவூர் ஊராராகிய, நான் ஐயன் ஐயன், என் கையெழுத்து.
- 243 - உத்தூர் ஊராராகிய, நான், நக்கன் முள்ளி, என் கையெழுத்து.
- 246 - நன்னிமங்கலம் பிரம்மதேயத்து சபையின், நான், கண்ணன் அலங்காரப்ரியன், என் கையெழுத்து.
- 249 - பொருவானூர் பிரம்மதேயத்து சபையின், நான், வெட்கோவன் மாதேவன் ஊரான், என் கையெழுத்து.
- 253 - ஆலங்குடி ஊராராகிய, நான், காசியப்பன் சூரியன் அரங்கன், என் கையெழுத்து.
- 256 - துறையூர் ஊராராகிய, நான், திரிட்டி வைகுந்தன், என் கையெழுத்து.
- 259 - பிரம்பில் பிரம்மதேயத்து சபையின், நான் குணவான் நந்தி என்ற அலங்காரப்ரியன், என் கையெழுத்து.
- 263 - கடம்பங்குடி ஊராராகிய, நான், குணவான் நந்தி என்ற அலங்காரப்ரியன், என் கையெழுத்து.
- 265 சேந்தமங்கலம் ஊராராகிய, நான், ஊரன் ஐயன், என் கையெழுத்து.
- 268 - சிறுச்சேந்தமங்கலம் ஊராராகிய, நாங்கள், எட்டி வளஞ்சுழியன் சங்கன், என் கையெழுத்து.
- 270 - குற்றாலம் ஊராராகிய, நான், வெட்கோவன் தேவன் ஊரான், என் கையெழுத்து.
- 273 - திருவானூர் ஊராராகிய, நான், சதுர்முகன் அரங்கன், என் கையெழுத்து.
- 276 உவர்குடி பிரம்மதேயத்து சபையின், நான், வெட்கோவன் மானாகன் நாராயணன், என் கையெழுத்து.
- 280 - மூஞ்சிக்குடி ஊராராகிய, நான், வெட்கோவன் மானாகன் கண்ணன், என் கையெழுத்து.
- 284 திருக்கண்ணங்குடி பிரம்மதேயத்து சபையின், நான், வெட்கோவன் அதிராமனிருபத்துநால்வன் என்ற முன்னூற்றுவன், என் கையெழுத்து.
- 288 - கடம்பவளவாட்கை ஊராராகிய, நான், ஊரான் ஊரான், என் கையெழுத்து.
- 292 - பள்ளன்கொற்றங்குடி ஊராராகிய, நான், ஊரான் ஊரான், என் கையெழுத்து.
- 295 - வென்கிடாங்கில் ஊராராகிய, நான், ஊரான் நக்கன், என் கையெழுத்து.
- 298 - ஆனைமங்கலம் பிரம்மதேயத்து, நான், ஆரிதன் சிரியன் கடம்பன், என் கையெழுத்து.
- 300 - திருநாரையூர் நாடு பிரம்மதேயத்து, நான், தூர்பில் ஸ்ரீதர பட்டன், என்

*கையெழுத்து.*

- *303 - வேளநாட்டைச் சார்ந்த திருநள்ளூர் பார்க்குளத்தைச் சேர்ந்த பத்மனாப பட்டன்.*
- *308 - ராஜேந்திரசிம்ஹ வளநாட்டின் ஸ்ரீ வீரநாராயணன் சதுர்வேதிமங்கலத்தின் துவேதைகோமபுரத்தில் வசிக்கும் நந்தீஸ்வர பட்டன்*
- *311லிருந்து - அரச செயலாளர்கள் மின்னவன் மூவேந்தன், கொற்றமங்கலமுடையான், தேவன்குடையன்; பொறுப்பாளர்கள் கடலங்குடியைச் சேர்ந்த தாமோதர பட்டன், கோட்டையூரைச் சேர்ந்த பூவாத்தா பட்டன்; நமது செயலாளர்கள் பராக்கிரமசோழ மூவேந்தவேளன், செம்பியன் மூவேந்தன், சோழவேளன், அரைசூற்றுடையான், புள்ளமங்களம் பொறுப்பாளர் பரமேஸ்வர பட்டசர்வக்ரதுயாஜின் ஆகியோர், இந்தக் குறிப்புகள் வருவாய் ஏட்டில் பதியப்பட வேண்டும் என ஆணையிட்டு சாசனத்தின் அடிப்படையில் இவர்களது கையெழுத்து இடப்பட்டு வெளியிடப்படுகிறது. புறவுவரி (அலுவலகர்) ஆலங்குடியைச் சேர்ந்த கோடாண்டன் சேனன், பூதமங்கலத்தில் வசிக்கும் இளவடிகள் நல்லாரன், ஆலத்தூரில் வசிக்கும் கற்பகன் சோலை, வரிப்பொத்தகம் (வருவாய் ஏட்டு பொறுப்பாளர்), பருத்தியூர் தலைவர்சிங்கன் வேங்கடன், முகவெட்டி (அலுவலகர்கள்) கீழ்வாய் கனவாடி, முந்தன் அரங்கன், சையதன் அமலன், தாத்தன் சிகித்தன் (ஸ்ரீ கிருஷ்ணா), வரிப்பொத்தகக்கணக்கு (வருவாய் ஏட்டின் கணக்காய்வாளர்) மாதேவன் பூமி வரியிலிடு(வருவாய் ஏட்டில் குறிப்புகளைப் பதிபவர்கள்), தளி வீரசோழன், உரையூரில் வசிப்பவர் மற்றும் பாட்டோலை ( அரச ஆணைக்குப் பொறுப்பானவர்கள்), பெருமான் அம்பலத்தாடி சீகந்தன் (ஸ்ரீகந்தன்) தேவன் மாகாளன் அரிஞ்சி, நக்கன் மந்தகவன், இவர்கள் அனைவரது முன்னிலையில் வருவாய் ஏட்டில் குறிப்புகள் பதியப்பட்டு நன்கொடையைப் பெற்றுக்கொள்பவரிடம் இச்சாசனப்பத்திரம் மன்னனின் 23ஆம் ஆட்சியாண்டு 163ஆம் நாளில் வெளியிடப்படுகிறது.*
- *323 - உய்யகொண்டார் வளநாட்டின் ஒரு பகுதியாகிய திறைமூர் நாட்டின் தலைவனான அறையன் அருமொழி என்ற ராஜேந்திரசோழ பல்லவறையன் கையெழுத்து.*
- *325 - உய்யகொண்டார் வளநாட்டின் ஒரு பகுதியாகிய வேநாட்டின் கேரளாந்தக சதுர்வேதிமங்களத்தின் கிருஷ்ணன் ராமன் என்ற ராஜேந்திரசோழ பிரம்மராயனால் அங்கீகரிக்கப்பட்டது.*
- *327 - நித்தவினோத வளநாட்டின் ஒரு பகுதியாகிய பாம்புனிகூற்றத்தின் அரைச்சூரில் வசிக்கும் இறாயிறவன் பல்லவயன் என்ற உத்தமசோழ பல்லவறையனால் அங்கீகரிக்கப்பட்டது.*
- *329 - ராஜேந்திரசிம்ஹ வளநாட்டின் ஒரு பகுதியாகிய குருக்கை நாட்டின் கடலங்குடியில் வசிக்கும் துவேதைகோமபுரத்து தாமோதர பட்டனால் அங்கீகரிக்கப்பட்டது.*
- *330 - உய்யக்கொண்டார் வளநாட்டின் ஒரு பகுதியாகிய அம்பர் நாட்டின் குரும்பில் தலைவன் அறையன் சீகந்தன் (ஸ்ரீகந்தன்) என்ற மீனவன் மூவேந்தவேளனால் அங்கீகரிக்கப்பட்டது.*

### சிறிய லெய்டன் செப்பேடுகள்

இச்செப்பேடு சமஸ்கிருதத்தில் அல்லாமல் முழுமையும் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்களும் கலந்த வகையில் செப்பேட்டில் உள்ள சொற்கள் அமைந்துள்ளன. பெரிய லெய்டன் செப்பேடுகளில் உள்ளது போல இச்செப்பேட்டு வரிகளுக்கான எண்

வழங்கப்படவில்லை. இது ராஜகேசரிவர்மன் என்ற முதலாம் குலோத்துங்கனின் 20ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட செப்பேடு. குலோத்துங்கச் சோழனின் மெய்கீர்த்தியின் தொடக்க வரிகளான 'புகழ்மாது விளங்க..' என்ற வாக்கியத்தோடு இச்செப்பேடு தொடங்குகின்றது.

இதில் உள்ள வாக்கியங்கள் கீழ்க்காணும் செய்திகளைக் குறிப்பிடுகின்றன. சோழமன்னன் முதலாம் குலோத்துங்கன் தனது பள்ளிப்பீடத்தில் (ஆகவமல்ல குலகாலப்புரத்தில், தனது அரண்மனையின் குளியல் பகுதியில் காளிங்கராஜன் என்ற சாய்வு ஆசனத்தில் என இது குறிப்பிடப்படுகிறது) சாய்ந்து அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது கடாரத்து மன்னனின் இரண்டு தூதுவர்கள் அவனைக் காணவருகின்றனர்.

தூதுவர்களின் பெயர்: ராஜவித்யாதரா ஸ்ரீ சாமந்தா, அபிமானோதுங்க ஸ்ரீ சாமந்தா. ராஜேந்திரசோழப்பெரும்பள்ளிக்கும் ராஜராஜபெரும்பள்ளிக்கும் அவை அமைந்துள்ள ஜெயமாணிக்க வளநாட்டின் ஒரு பகுதியான பட்டனம்கூற்றத்தின் சோழ குலவள்ளிப்பட்டன கிராமங்களுக்கு வரிவிலக்குத் தர வேண்டுமென்ற கோரிகையை முன்வைப்பதோடு அந்தராயம், வீரசேஷை, பன்மை பண்டைவெட்டி, குந்தாலி, சுங்கமேரா ஆகிய கிராமங்களுக்கும் இதே சலுகையை வழங்க வேண்டி கோரிக்கை வைக்கின்றனர்.

இந்தச்சலுகை தொடர்பான செய்திகளை அரசாணையாகச் செய்வித்து அதனை செப்புப்பட்டயத்தில் பொறித்து பள்ளியின் (சூடாமணிவிகாரை) சங்கத்தாருக்கு வழங்க வேண்டும் என்று தங்கள் கோரிக்கையில் குறிப்பிடுகின்றனர். அந்தத் தூதுவர்கள் மேலும், பள்ளிச்சந்தா அமைந்துள்ள காணியாளர் நிலங்கள் மொத்தமாக சூடாமணிவிகாரை பள்ளிக்கு உரிமையாக்கித் தரவும் இச்செப்புச்சாசனத்தில் குறிப்பிட வேண்டி விண்ணப்பம் வைக்கின்றனர்.

அதன்படி ஒரு அரச ஆணை அரச அதிகாரி ராஜேந்திரசிங்க மூவேந்தவேளனால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. இந்த அரச ஆணை ராஜராஜபெரும்பள்ளியின் தற்போதைய நிலை, விரிவு, காணிக்கடன், நிச்சயித்த நெல்லு ஆகியவை ஆராயப்பட்டு செப்பேட்டில் அந்த அரசாணை பொறிக்கப்பட்டது. இதன்படி:

1. இந்த நிலத்தின் வருவாயும், வரியும் சூடாமணி விகாரை பெரும்பள்ளியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்படுகின்றன.

2. பள்ளிச்சந்தா பகுதி கிராமங்களில் இருந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு இக்கிராமங்கள் முழுமையாக பௌத்த விகாரைக்கும் பள்ளிக்கும் சொந்தமாக்கி சங்கத்தாருக்கு வழங்கப்படுகின்றன.

3. பள்ளிச்சந்தா பகுதியில் அமைந்த கிராமங்களின் பெயர்கள் தனிப் பட்டியலாக வழங்கப்படுகின்றன. இச்செப்பேடு வழங்கப்பட்ட நிலத்தின் எல்லைகளை விவரிக்கின்றது.

அதன்படி இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்படும் கிராமங்களின் பெயர்கள் வருமாறு:

- ஜெயமாணிக்க வளநாட்டின் பட்டனக் கூற்றம் ஆனைமங்கலம் கிராமம்
- ஆனைமங்கலத்தில் உள்ள பிரம்மதேயங்கள்
- ஜெயமாணிக்க வளநாட்டின் பட்டனக் கூற்றம் முஞ்சிக்குடி கிராமம்
- திருவாரூர் கூற்றம் ஆமூர் கிராமம்
- அலநாடு வடக்குடி என்ற நாணலூர் கிராமம்
- அலநாடு கீழ் சந்திரப்பாடி கிராமம்
- பாலையூர் பிரம்மதேயம்
- ஜெயங்கொண்ட சோழ வளநாட்டின் புத்தக்குடிகுறும்பு நாடு
- இடைக்கை நாடு உதயமார்த்தாண்ட நல்லூர் கிராமம்

லெய்டன் செப்பேடுகளில் உள்ள செய்திகளின் அடிப்படையில் கடாரத்தை ஆண்ட சைலேந்திர பரம்பரையினரே ஸ்ரீவிஜயப் பேரரசை ஆண்டு வந்தனர் என்பதை அறிகிறோம். இந்தச் சிறிய லெய்டன் செப்பேடு, இரண்டு அதிகாரிகளின் உத்தரவின் படி பொறிக்கப்பட்டது என்ற தகவலையும் கூடுதலாக அறிய முடிகிறது. சந்திவிக்ரஹின் ராஜவல்லப பல்லவ அரையன், அதிகாரி ராஜேந்திரசிங்க மூவேந்தன் என்ற செய்திகள் இறுதி வரிகளில் இடம்பெறுகின்றன.

இச்செப்பேட்டைப் பொறித்தவனின் பெயரையும் இச்செப்பேடு குறிப்பிடுகிறது. அதன்படி, ஊத்துக்குடியைச் சேர்ந்த விக்கிரமபரனத்தேரிந்த வலங்கை வேளைக்காரனான நிலையுடைய பன்னையன் நிகரிலிசோழன் மதுராந்தகன் என்பவன் இதனைத் தயாரித்ததாகக் குறிப்பிடுகிறது இச்செப்பேடு (Majumthar, Note on Sailendra Kings mentioned in Leiden Plates, p.283). சோழ மாமன்னன் ராஜராஜன் இக்கொடையை வழங்கிய ஆண்டாக பொ.ஆ 1005 கருதப்படுகிறது. இது நிகழ்ந்து மிகக் குறுகிய காலத்திலேயே ஸ்ரீவிஜய மன்னன் சூளாமணிவர்மன் இறந்து போயிருக்க வாய்ப்புள்ளது என்றும் அதன் பின் அவன் மகன் சூளாமணி விகாரை கட்டும் பணியை இக்காலகட்டத்தில் தொடங்கியிருக்க வாய்ப்புண்டு என்றும், ஆயினும் இப்பணி முடியும் முன்னரே அவனும் இறந்து போகவே அவனது மகன் இந்த விகாரை கட்டும் பணியைத் தொடர்ந்தான் என்றும் பேராசிரியர் ஆர்.சி. மஜூம்தார் குறிப்பிடுகிறார் (Majumthar, Note on Sailendra Kings mentioned in Leiden Plates, p.283).

பேராசிரியர் ஆர்.சி. மஜூம்தார் சைலேந்திரா பரம்பரையைப் பற்றிய தனது கருத்துக்களை விவரிக்கும் போது, சைலேந்திரர்கள் என்போர் அடிப்படையில் இந்தியாவிலிருந்து இந்தோனேசிய, மலாயா தீபகற்ப பகுதிக்குக் குடிபெயர்ந்தவர்கள் என்றும், அவர்கள் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தவர்கள் என்பதோடு சமய ரீதியான வழிகாட்டுதல்களையும் இந்தியாவிலிருந்து பெற்றனர் என்றும் குறிப்பிடுகின்றார். இதற்குப் பலம் சேர்க்கும் வகையில் பொ.ஆ 7ஆம் நூற்றாண்டின் ஹியூன் ட்சாங், ஐசிங் என்ற சீனத்துப் பயணிகளின் குறிப்பானது மலாயா இந்தோனேசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நெருங்கிய சமயத் தொடர்புகள் இருந்தன என்பதைக் குறிப்பிடுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

மேலும், பொ.ஆ 778ஆம் ஆண்டு கெலூராக் கல்வெட்டு சைலேந்திர மன்னர்களின் சமய குரு வங்காளத்தின் கவுடா என்ற பகுதியில் இருந்து வந்தவர் என்ற செய்தியையும் குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டுகின்றார். பொ.ஆ 9ஆம் நூற்றாண்டின் மத்தியில் சைலேந்திர மன்னன் இந்தியாவின் நாளந்தா பகுதியில் ஒரு பௌத்த விகாரையை எழுப்பினான் என்றும் அவனது கேண்டுகோளுக்கிணங்க வங்காளத்தின் மன்னன் தேவபாலா ஐந்து கிராமங்களை இந்த விகாரையின் பராமரிப்பிற்காக வழங்கினான் என்ற செய்தியையும் குறிப்பிடுகின்றார். நாளந்தாவில் பௌத்தவிகாரை கட்ட வேண்டி சைலேந்திர மன்னர்கள் வங்காள மன்னன் தேவபாலாவிடம் கோரிக்கை வைத்து கிராமங்களின் வருவாயை விகாரையின் பாதுகாப்பிற்காகக் கேட்டுக் கொண்டதைப் போலவே ராஜேந்திர சோழனிடம் பௌத்த விகாரைக் கட்ட நாகப்பட்டினத்தில் நிலமும் வருவாயும் பெறச் செய்த முயற்சியையும் அதன் தொடர்பாக ராஜேந்திர சோழன் அளித்த கொடை பற்றிய செய்தியையும் பெரிய லெய்டன் செப்பேடு வெளிப்படுத்துவதை ஒப்பிட்டு எழுதுகிறார்.

### சோழர்களின் கடாரப் படையெடுப்பு

ராஜராஜன் காலத்தில் நட்புடன் இருந்த உறவு பின்னர் மாற்றம் அடைவதையும், சோழர்களின் கடற்படை கடாரத்தைப் போர் செய்து கைப்பற்றிய செய்திகளையும் காண்கின்றோம். இது பற்றி மேலும் ஆராயும் போது கூடுதல் தகவல்கள் கிடைக்கின்றன. பொ.ஆ 11ஆம் நூற்றாண்டில் சோழர்களின்

கடற்படை இரண்டு முறை மலாயா தீபகற்பத்தில் கடற்தாக்குதல்களை நிகழ்த்தியது என்றும், அக்காலகட்டத்தில் மூன்றுமுறை தங்களது வணிகத்தூதுவர்களைச் சீனாவிற்கு அனுப்பியது என்றும் நொபுரு கரோஷிமா தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

இதே காலகட்டத்தில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள பாருஸ் நகரில் ஐநூற்றுவர் வணிகக்குழு தங்களது வணிகச் செயல்பாடுகளை ஒரு கல்வெட்டில் எழுதி கற்தூண் ஒன்றில் பொறித்து வைத்த செய்திகளையும், பாரூஸ் பகுதி ஐநூற்றுவர் வணிகக்குழுவின் காலனியாகத் திகழ்ந்தது என்றும் நொபுரு கரோஷிமா தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார் (Karashima, 2009, p.56).

இக்கல்வெட்டு பற்றிய செய்தி 1892ம் ஆண்டில் வெளிவந்தது. வரலாற்று ஆசிரியர் திரு.நீலகண்ட சாஸ்திரி இக்கல்வெட்டைப் பற்றி 1932ம் ஆண்டில் தனது ஆய்வில் பதிகின்றார். ஆயினும் இக்கல்வெட்டில் உள்ள செய்திகள் வெளியிடப்படவில்லை என்பதோடு அதன் பின்னர் சில காலங்கள் இக்கல்வெட்டு காணாமல் போனதாகவும், அதன் பின்னர் தனது ஆய்வுக் குழு ஜகார்த்தா சென்ற போது இதனை ஜகார்த்தா தேசிய அருங்காட்சியகத்தில் தான் 1993ம் ஆண்டில் நேரில் பார்த்ததையும், அக்கல்வெட்டில் உள்ள செய்திகள் பேராசிரியர் சுப்பராயுலு அவர்களால் வாசிக்கப்பட்டு வெளியிடப்பட்டது என்ற செய்தியையும் நொபுரு கரோஷிமா குறிப்பிடுகின்றார் (Subbarayalu, 'Tamil Merchant-guild Inscription at Barus, Indonesia: A rediscovery', in Ancient and Medieval Commercial Activities, edited by N.Karashima, pp. 19-26).

ஆர்.சி.மஜூந்தார், சோழர்களின் கடாரத்தின் மீதான கடற்படை தாக்குதல் 1017ஆம் ஆண்டு நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும், இதனைத் தொடர்ந்து மிகப் பலம்பொருந்திய தாக்குதல் 1025ம் ஆண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். முதல் இரண்டு தாக்குதல்களுக்குப் பின் மூன்றாவது முறை சோழக் கடற்படை கடாரத்தை 1070ஆம் ஆண்டில் மீண்டும் தாக்கியது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். ராஜேந்திர சோழனின் 6ம் ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும் தகவலின் அடிப்படையில் முதல் தாக்குதலை 1017ம் ஆண்டில் கொடுத்திருக்க வேண்டும் என்று கூறுகிறார் (Majumdar, 1937, P171-172). இதற்கு மாறாக நீலகண்ட சாஸ்திரியின் ஆய்வுகள் 1025இல் தான் ராஜேந்திர சோழனின் படைகள் முதல் தாக்குதலைச் செய்தன என்ற கருத்துக்களையும் சுட்டிக்காட்டுகின்றார் தான்சென் சென் (Sen, 2009, p.68).

சோழப்பேரரசு சீனாவுடனான வர்த்தகத்தை நேரடியாகச் செய்வது தனது பொருளாதார பலத்தை பாதிக்கும் என்ற ஒரு காரணத்தை முன்னிட்டு சோழ வணிகர்கள் நேரடியாக சீனாவுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதைத் தடுக்கும் முயற்சியை ஶ்ரீவிஜயப் பேரரசு மேற்கொண்டது. இதன் விளைவாகவே சோழப் பேரரசு ஶ்ரீவிஜயப் பேரரசுக்கு எதிராகத் தாக்குதலை 1017ஆம் ஆண்டில் நிகழ்த்தியது. இது சோழப் பேரரசின் வணிகத் தூதுவர்கள் சீனாவிற்குச் சென்று வந்த குறுகிய காலகட்டத்திலேயே நிகழ்ந்தது. ஶ்ரீவிஜயப் பேரரசு சோழப்பேரரசின் பெருமையைச் சீனப்பேரரசிற்குச் சரியாக விவரிக்காமல் அதன் சிறப்பைக் குறைத்து மதிப்பிடும் வகையில் கூறியிருந்த செய்திகள் சோழ வணிகர்களின் சீனாவுக்கான நேரடி பயணத்தின் போது தெரியவந்ததன் அடிப்படையில், அதனை எதிர்கொள்ளும் வகையில் இத்தாக்குதல் 1017ல் முதலில் நடந்திருக்கலாம் என தான்சென் சென் குறிப்பிடுகின்றார் (Sen, 2009, P 69).

## முடிவுரை

பெரிய லெய்டன், சிறிய லெய்டன் என அறியப்படுகின்ற ஆனைமங்கலம் செப்பேடுகள் தமிழக வரலாற்றில் கீழ்க்காணும் வகையில் முக்கியத் தரவுகளாக அமைகின்றன:

- சோழ மன்னர்களின் பரம்பரை மற்றும்

மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கிய செய்திகளை இவை வரிசையாக விவரிக்கின்றன.

- ஸ்ரீவிஜயப் பேரரசுடன் கூடிய நட்பின் வெளிப்பாடாக ஸ்ரீவிஜய மன்னனின் விண்ணப்பத்திற்கேற்ப ஆனைமங்கலம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளைச் சார்ந்த கிராமங்கள் சிலவற்றின் வருவாயைச் சோழப்பேரரசன் ராஜராஜன் தன் ஆட்சிக்காலத்தில் நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிஜய மன்னன் தன் தந்தையின் பெயரில் எழுப்பிய சூடாமணி விகாரைக்கும் அப்பள்ளிச்சங்கத்திற்கும் கொடையாக அளித்தான். இச்செய்தியை அவன் மகன் மாமன்னன் ராஜேந்திரன் செப்புப்பட்டயமாக வெளியிட்டான். பின்னர் சோழர் குலத்தின் மாமன்னன் முதலாம் குலோத்துங்கன் தன் காலத்திலும் முன்னர் ராஜராஜன் வழங்கிய கொடையை நீட்டிக்கும் வகையில் ஒரு சாசனம் வெளியிட்டு சூடாமணி விகாரைக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.
- சோழப்பேரரசின் காலத்தில் வழக்கில் இருந்த வெவ்வேறு வகை வரிகள் தொடர்பான செய்திகள்.
- அரசாணை எழுதப்படுகின்ற செப்புப்பட்டயங்களில் அவற்றைத் தயாரிக்கும் ஊழியர்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன என்ற செய்தி.
- மாமன்னன் ராஜராஜ சோழன் ஒரு கிராமத்தின் வருவாயைக் கொடையாக வழங்கும் போது அவன் மட்டுமே அதனை முடிவு செய்து கையெழுத்திட்டு வழங்கவில்லை என்பதும் கிராமத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கிய அதிகாரிகளும் கிராமப் பிரதிநிதிகளும் அந்த அரசாணையில் இணைந்து கையெழுத்திட்டிருக்கின்றனர் என்ற செய்தி.
- மாமன்னன் ராஜராஜ சோழன், முதலாம் ராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கச் சோழன் கால ஆட்சியின் போது பௌத்த மத வழிபாட்டினரின் சமய சுதந்திரத்திற்குத் தமிழ்நாட்டில் ஆதரவு அளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு வரலாற்றுக்கு மேற்குறிப்பிட்ட வகையில் முக்கியத்துவம் பெறுகின்ற இச்செப்பேடுகள் இன்று தமிழ்நாட்டைக் கடந்து ஐரோப்பாவில் நெதர்லாந்தில் பாதுகாக்கப்படுகின்றன என்பது மிகுந்த வருத்தத்திற்குறிய ஒன்றாகும். 2021ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 4ம் தேதி வெளிவந்த பத்திரிக்கைச் செய்தியில் நெதர்லாந்து அரசாங்கம் ஏற்கனவே தாங்கள் வாக்களித்தபடி, கடந்த நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் கையகப்படுத்தி நெதர்லாந்து கொண்டு வந்த முக்கிய அரும்பொருட்களைத் தாங்கள் ஆட்சி செலுத்திய முன்னாள் காலனித்துவ நாடுகளுக்கே திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கையினைத் தொடங்கி இருப்பதை வெளியிட்டிருந்தது (<https://news.artnet.com/art-world/netherlands-restitution-guidelines-1941734>). இதற்காக ஆலோசனைக் குழு ஒன்றினையும் உருவாக்கி உள்ள நெதர்லாந்து அரசு நெதர்லாந்து அருங்காட்சியகங்கள் தாம் பாதுகாக்கின்ற அரும் பொருட்களைக் காலனித்துவ நாடுகள் மீண்டும் முறையாக வேண்டுகோள் விடுத்துக் கேட்கும் பட்சத்தில் அவற்றை அந்நாடுகள் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருப்பதையும், அதற்கு அருங்காட்சியகங்கள் உடன்படுவதையும் ஓர் அறிக்கையில் வெளியிட்டிருந்தது (<https://news.artnet.com/art-world/netherlands-report-cultural-objects-restitution>).

இந்த அறிக்கை கூறும் தகவல்களின் அடிப்படையில் லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் அரும்பொருட்காட்சி பகுதியில் வைக்கப்பட்டிருக்கின்ற தமிழர் வரலாற்றுச் சிறப்பு சேர்க்கும் பெரிய, சிறிய லெய்டன் செப்பேடுகளைத் தமிழக அரசு தக்க முறையில் மீட்டுக் கொண்டு வர வாய்ப்பு உள்ளதாகக் கருத முடிகின்றது.

# References

Endjat Djaenuderadjat. (2013). *Atlas Pelabuhan-Pelabuhan Bersejarah di Indonesia*. Jakarta, Indonesia: Kementerian Pendidikan dan Kebudayaan.

Karashima, Noboru. (2009). Medieval Commercial activities in the Indian Ocean as revealed from Chinese Ceramic-Shreds and South Indian and Sri Lankan Inscriptions, *Nagapattinam to Suvarnadwipa, Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia*. Singapore: Institute of Southeast Asian Studies.

Majumdar, R., C. (1937). Ancient Indian Colonies in the Far East. *Suvarnadvipa*. (Vol. 2) Dacca: Dacca University Press.

Munoz, Pail Michael. (2006). *Early Kingdoms of the Indonesian Archipelago and the Malay Peninsula*. Singapore: Editions Didier Millet Pte Ltd.

Nadana Kasinathan. (1989). *Kalleluthukalai*. Madras: Manivasagar Pathipagam.

Nilakanta Sastri, K., A. (1949). *History of Sri Vijaya* (Sir William Meyer Lectures, 1946-47). India:University of Madras.

Raj Chatterjee, Bijan. (1993). *India and Java*. Calcutta: Prabash Press.

Ramachandran, T., N. (2005). *The Nagapattinam and other Buddhist bronzes in the Chennai Museum*.Tamilnadu: Government of Tamilnadu

Rangarajan., A. (2014). *Mystery of a royal grant*. https://frontline.thehindu.com/arts-and- culture/heritage/mystery-of-a-royalgrant/article6004551.ece

Ray, Sudhir Chandra. (1954). The Sailendra Empire of Ancient South-East Asia. *The Indo-asian Culture.* (Vol. 3). New Delhi: Indian Council for Cultural Relations.

Sen, Tansen. (2009). *The Military Campains of Rajendra Chola and the Chola-Srivijaya-China triangle: Nagapattinam to Suvarnadwipa, Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia*. Singapore: Institute of Southeast Asian Studies.

Subbarayalu, Y. (2011). ‘Tamil Merchant-guild Inscription at Barus, Indonesia: A rediscovery’, in *Ancient and Medieval Commercial Activities*. (eds) by N.Karashima.

Susanto Zuhdi. (1993). ‘Pasai Kota Pelabuhan Jalan Sutra’, *Kumpulan Makalah Diskusi*. Jakarta. Indonesia: Indonesia. Departemen Pendidikan dan Kebudayaan.